## ஒவ்வொரு நாளும் முதலமைச்சரின் செல்வாக்கு உயர்கிறது! மக்கள் நலத்திட்டங்களால்

# இதுவரை வாக்களிக்காதவர்களும் இனி நமக்கு வாக்களிக்க முடிவு செய்துவிட்டனர்!

## பள்ளிக்கரணையில் நடைபெற்ற முதல்வரின் பிறந்தநாள் விழா

## பொதுக்கூட்டத்தில் - கனிமொழி கருணாநிதி எம்.பி. உரை!

**சென்னை, மார்ச் 8-**

**“ஒவ்வொரு நாளும் முதலமைச்சரின் செல்வாக்கு உயர்கிறது. மக்கள் நலத் திட்டங்களால் இதுவரை வாக்களிக்காதவர்களும் இனி நமக்கு வாக்களிக்க முடிவு செய்துவிட்டனர்” என்று கழகத் தலைவர் பிறந்தநாள் வாழ்த்தரங்கத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் உரையாற்றும்போது கூறினார்.**

சென்னை பள்ளிக்கரணை, காமகோடி நகரில், 6.3.2025 அன்று சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் மத்திய பகுதி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற “சொல்லைச் செயலாக்கும் சூரியன்” என்ற தலைப்பில் நடைபெற்ற வாழ்த்தரங்கத்தில் கலந்து கொண்டு உரையாற்றி, நலத்திட்ட உதவிகளை வழங்கி தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி ஆற்றிய உரை வருமாறு:-

“சகோதரி தமிழச்சி தங்கபாண்டியன் அவர்கள் இங்கே பேசும்போது, கழக ஆட்சிப் பொறுப்பு ஏற்றதிலிருந்து மருத்துவத் துறையில் செய்திருக்கும் பல்வேறு சாதனைகளைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக மக்களைத் தேடி மருத்துவம் என்ற நமது அரசின் திட்டத்தை ஐ.நா. எந்த அளவுக்கு பாராட்டி, பரிசு தரும் அளவுக்கு அதை ஏற்றுக் கொண்டிருக்கிறது. அத்திட்டத்தின் புகழ்பாடியிருக்கிறது என்பது பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

இப்படி சாதாரண, சாமானிய மக்களைச் சென்றடையக் கூடிய வகையிலே, அவர்களை பாதுகாக்கக் கூடிய வகையில், வளர்ந்திருக்க கூடிய நாடுகளில் கூட கிடைக்காத மருத்துவ சேவைகள், மருத்துவ வசதிகள் தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய மிகச் சாதாரண மக்களுக்கு கிடைக்கும் வகையில், திட்டங்களை தந்து கொண்டிருக்கக் கூடிய ஆட்சி நமது முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களுடைய ஆட்சி.

**ஒன்றிய அரசு மருந்துகளை இரட்டிப்பு விலைக்கு வழங்குவது ஏன்?**

சில நாட்களுக்கு முன்பு வரையிலே மக்களை தேடி மருத்துவம் தான் நமது முத்தாய்ப்பான திட்டம் என்று நான் எண்ணியிருந்தேன், முதலமைச்சரின் மருந்தகம் திட்டத்தை நேற்று அமைச்சரோடு சென்று பார்வையிடும் வரை.

எனக்குத் தெரிந்து ஒன்றிய அரசாங்கத்தின் உருப்படியான ஒரு திட்டம் இருக்கிறது. அதுவும் ஏற்கனவே ஆட்சியில் போடப்பட்டு கட்டமைத்து வைத்திருந்த திட்டம் என்றாலும் அதை செயல்படுத்தி இருக்கக்கூடியவர்கள் இன்றைய பாஜக ஆட்சியில் இருப்பவர்கள். பிரதான் மந்திரி ஜன் அவுஷதி என்ற திட்டம் தான் அது. அதாவது சாதாரண சாமானிய மக்களுக்கு நியாயமான விலையிலே மருந்துகள் கிடைக்கக்கூடிய திட்டம்.

ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்களின் திட்டத்தை பார்த்த பிறகு இவ்வளவு குறைவான விலைகளுக்கு ஒரு மாநில அரசாங்கம் மருந்துகளை மக்களுக்கு வழங்கும்போது இதில் இரட்டிப்பு விலைக்கு ஏன் ஒன்றிய அரசாங்கம் மருந்துகளை வழங்கிக் கொண்டிருக்கிறது என்று எனக்கு புரியவில்லை.

**மிகச்சிறப்பான ‘முதல்வர் மருந்தகம்’ திட்டம்!**

அத்தியாவசியமான மக்களுக்கு தேவையான 26 மருந்துகளை யாரும் நினைத்துக் கூட பார்க்க முடியாத விலையில் 10 ரூபாய் 15 ரூபாய் என்ற விலையில் சாதாரணமாக பேசும்போது சொல்லுவார்கள் சல்லிசாக கிடைக்கிறது என்று. அப்படிக் கிடைக்கக்கூடிய வகையிலே யாரும் என்னுடைய வருமானத்தில் பாதி மருந்துக்கே போகிறது என்று கவலைப்பட முடியாத அளவுக்கு மிக சாதாரண விலையில் முதலமைச்சர் மருந்தகத்தில் இன்று 200 மருந்துகளுக்கு மேல் வழங்கப்படுகிறது. இதைவிட சிறப்பான ஒரு திட்டம் வேறு எதுவும் இருக்க முடியாது.

ஒவ்வொருவர் வீட்டிலும் பெரியவர்கள் இருக்கிறார்கள். ஏதாவது ஒரு வகையிலே, ஒரு மருந்து தினமும் தேவைப்படக்கூடிய ஒரு சூழலில் தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். குழந்தைகளுக்கு ஏதாவது ஒன்று தேவைப்படுகிறது. இளைஞர்களுக்கு கூட பிரஷர், சர்க்கரை இருக்கிறது. அதனால் மருந்து தேவைப்படுகிறது.

இந்த நிலையில் வருமானத்தில் அதிகமான செலவு மருந்துக்கே போகிறது என்ற நிலையை மாற்றி இருக்கக்கூடிய திட்டம்தான், முதலமைச்சருடைய மருந்தகம் என்ற மிகச்சிறப்பான ஒரு திட்டம்.

அமைச்சர் இங்கே குறிப்பிட்டது மாதிரி, நமது முதலமைச்சரின் செல்வாக்கு கடந்த பிப்ரவரியில் இருந்து இன்னும் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. ஒவ்வொரு நாளும் மக்களுக்காக பல்வேறு திட்டங்களை செய்து வருகிறார்.

ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்ட போது முதலமைச்சர் சொன்னார் அல்லவா எனக்கு வாக்களித்த மக்களுக்கும் வாக்களிக்காத மக்களுக்கும் சேர்த்து முதலமைச்சராக செயல்படுவேன், ஏன் எனக்கு வாக்களிக்கவில்லை என்று அவர்களே நினைக்கும் அளவுக்கு நான் சிறப்பாக செயல்படுவேன் என்று.

அந்த வாக்களிக்காத மக்கள் இன்று ஏன் இவருக்கு ஓட்டு போடவில்லை என்று வருத்தப்படக் கூடிய அளவுக்கு, அடுத்த தேர்தலிலே நிச்சயமாக அவருக்கு வாக்களிப்போம் என்ற உறுதியேற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் முதலமைச்சருக்கு இந்த அளவு செல்வாக்கு உயர்ந்து கொண்டிருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

பெண்களுக்கான விடியல் பயணம் பற்றி நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. எங்காவது வெளியில் போக வேண்டும், என்றால் யாரிடமும் அனுமதி கேட்டுக் கொண்டு, அவர்கள் கொடுக்கும் காசில்தான் சென்றுவர வேண்டும் என்ற நிலைமை இப்போது இல்லை. போகட்டுமா இல்லையான்னு என யாரிடமும் கேட்க வேண்டாம். பெண்கள் தாங்கள் நினைக்கும்போதெல்லாம் சுதந்திரமாக பயணம் செய்யலாம்.

**பெண்கள் கல்வி தடைபடாத புதுமைப் பெண் திட்டம்!**

அதேபோல புதிய கல்விக் கொள்கையில் எந்த இலக்கை உயர்கல்வியிலே அடைய வேண்டும் என நினைக்கிறார்களோ, அந்த இலக்கை தமிழ்நாடு ஏற்கனவே தாண்டி விட்டது. அதையும் தாண்ட வேண்டும் நம்முடைய சாதனையை நாமே மிஞ்ச வேண்டும் என்பதற்காக, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கக்கூடிய பெண்களுடைய கல்வி எந்த விதத்திலும் தடைப்பட்டுவிடக்கூடாது என புதுமைப் பெண் திட்டத்தை செயல்படுத்தி வருகிறார்.

பள்ளிக் கல்விக்கு நம்முடைய தலைவர் கலைஞர் திட்டத்தை கொண்டுவந்தார். எல்லா பெண்களும் பள்ளிக்கூடம் வரைக்கும் படிக்கணும், முடிக்கணும் என்பதற்காக தான் திருமண உதவி திட்டம் என்ற அந்த திட்டத்தையே கொண்டு வந்தார் தலைவர் கலைஞர். பெண்களை நீங்கள் படிக்க வையுங்கள், திருமணத்தை நான் செய்து வைக்கிறேன் என்று அந்தத் திட்டத்தை கொண்டு வந்தார் தலைவர் கலைஞர்.

அதனால் பெண்கள் இன்று கல்லூரி போகக்கூடிய நிலைக்கு வந்து விட்டார்கள். கல்லூரி படிப்பு எதற்காகவும் தடைப்பட்டு விடக்கூடாது என்பதற்காக நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் புதுமைப்பெண் என்ற அந்த திட்டத்தின் வழியாக மாதம் ஆயிரம் ரூபாய் நான் தருகிறேன், நீங்க போய் கல்லூரியில் படியுங்கள் என்று சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்.

முதலில் அது அரசு பள்ளிகளில் படித்த பெண்களுக்கு என்று கொண்டு வரப்பட்ட திட்டம். பிறகு அரசு உதவி பெறக்கூடிய பள்ளிகளில் படிக்கக்கூடிய பிள்ளைகளுக்கும் என்று விரிவாக்கப்பட்டிருக்கிறது. பெண்களுக்குத் தானா எங்களுக்கு இல்லையா என்று மாணவர்கள் கேட்ட பொழுது உங்களுக்காகவும் அந்த திட்டத்தை நான் விரிவு படுத்தி தருகிறேன் என்று தமிழ் புதல்வன் என்று மாதம் ஆயிரம் ரூபாய் கல்லூரி செல்லக்கூடிய மாணவர்களுக்கும் வழங்கப்படுகிறது. இப்படி தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய அத்தனை பிள்ளைகளும் உயர் கல்விக்கு செல்லக்கூடிய பிள்ளைகளாக ஆக்கியிருகிறது இத்திட்டம்.

**இளம்பெண்களின் கனவை நனவாக்கிய ஆட்சி!**

தூத்துக்குடியில் தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நேரிலே வந்து, அரசு உதவி பெறக்கூடிய பள்ளிகளிலே படித்த பிள்ளைகளுக்கும் அது தரப்படும் என்று விரிவாக்கம் செய்யப்பட்ட திட்டத்தை துவக்கி வைத்தார்.

அப்போது அந்த மேடையிலே ஒரு பெண் பேசினார். ’இந்த திட்டம் வருவதற்கு முன்னால் எனக்கு திருமணம் ஆகிவிட்டது. படிப்பதற்கு வழி இல்லை, வாய்ப்பில்லை, வசதி இல்லை. எனக்கு ஒரு மிகப்பெரிய கனவு இருந்தது, நான் நர்சிங் படிக்க வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் அந்த கனவு நிறைவேறாது என்று நம்பிக்கையற்ற நிலையில் நான் இருந்தேன். திருமணம் ஆகிவிட்டது, குழந்தை பிறந்து விட்டது. இனிமேல் எதுவும் படிக்க முடியாதுன்னு நினைச்சிட்டு இருந்தேன்.

ஆனா நம்முடைய முதலமைச்சர் இந்த திட்டத்தை, புதுமைப்பெண் என்ற இந்த திட்டத்தை கொண்டு வந்த பிறகு நான் மறுபடியும் கல்லூரிக்குச் சென்று படிக்கக்கூடிய நிலையை அடைந்திருக்கிறேன்’ என்று பேசினார்.




இப்படி எத்தனையோ இளம்பெண்கள் இளைஞர்களுடைய கனவுகளை எல்லாம் நிஜமாக்கிக் கொண்டிருக்கக்கூடிய ஆட்சி நம்முடைய முதலமைச்சர் ஆட்சி.

**கல்வியில் சிறந்த தமிழ்நாடு!**

புதிய கல்விக் கொள்கையை ஒன்றிய அரசாங்கம் கொண்டு வருகிறார்கள். இந்த புதிய கொள்கையை நாங்கள், அதாவது தமிழ்நாடு சொல்லித் தந்து நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். கல்வியிலே சிறந்து விளங்கக்கூடிய மாநிலங்களில் ஒன்றாக இருப்பது தமிழ்நாடு.

தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சி காலத்தில் கல்லூரிகளை துவங்கினார். பெண்களை வெளியூர்ல போய் படிக்கணும்னா வசதி இல்லாத குடும்பங்களில் அனுப்ப மாட்டார்கள் என்பதால், கல்லூரிகளை எல்லாம் பக்கத்து ஊரிலேயே தொடங்கினார் கலைஞர்.

வசதி இல்லாத குடும்பங்களில் இருக்கக்கூடிய பிள்ளைகளும் போய் படித்து விட்டு வர முடியும். பெண்களும் போய் படித்துவிட்டு வர முடியும். இன்று உயர் கல்வியிலே நாம் இந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறோம் என்றால் அது தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த திட்டம்.

**நாட்டிற்கே முன் உதாரணம் காலை உணவுத் திட்டம்!**

நம்முடைய பள்ளிகளிலே பார்த்துதான் இன்றைக்கு இந்தியாவிலேயே மதிய உணவு திட்டம் கொண்டுவரப்பட்டது. இன்று இந்த நாட்டிற்கே முன்னுதாரணமாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் காலை உணவு திட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள்.

இப்படி புதிய திட்டங்களை கொண்டு வந்து பிள்ளைகளின் கல்வி எந்த விதத்திலும் தடைப்பட்டுவிடக்கூடாது என்ற பாடுபட்டுக் கொண்டிருக்கக் கூடிய நமக்கு அவர்கள் கல்விக் கொள்கையை சொல்லித் தருகிறார்களாம்.

தமிழ்நாட்டினுடைய வரி மொத்தத்தையும் ஜி.எஸ்.டி. என்ற பெயரில் வசூல் செய்துகொள்கிறார்கள். எந்த மாநில அரசாங்கமும் வரி போட முடிவதில்லை. நிதி அமைச்சர் வந்திருந்தால் நிச்சயமா அது பற்றி பேசியிருப்பார். நம்முடைய வரி எல்லாம் வாங்கி வைத்துக் கொண்டு, நமக்கு தர வேண்டிய நிதியை தருவதில்லை.

**சமஸ்கிருதத்தை திணிக்கிறார்கள்!**

புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக் கொண்டால்தான், உங்களது பிள்ளைகளுக்கு கல்விக்காக தரக்கூடிய பணத்தை 2000 கோடிக்கு மேல தரவேண்டிய பணத்தை எஸ் எஸ்ஏ திட்டத்தில் கொடுக்க வேண்டிய பணத்தை நான் கொடுப்பேன் என ஒன்றிய அரசாங்கம் பிடித்து வைத்துக் கொண்டிருக்கிறது.

இன்று மூன்று மொழிகளை படியுங்கள் படியுங்கள் படியுங்கள் என்று ஹிந்தியை திணித்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் எதிர்த்துக் கேட்டதும், ‘நாங்க ஹிந்தி படிங்கனு சொல்லவே இல்லையே? மூணு மொழி படிங்கன்னு தான சொல்றோம்’ என்று கேட்கிறார்கள்

நான் கேட்கிறேன்.. இங்கே தமிழ்நாட்டில் கேந்திரிய வித்யாலயா பள்ளிகள் இருக்கிறதில்லையா? தமிழ்நாட்டில் நடக்கிற கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் எங்கையாவது தமிழ் சொல்லிக் கொடுக்கிறார்களா?

என்ன சொல்லிக் கொடுக்கிறார்கள். ஹிந்தி, இங்கிலீஷ், சமஸ்கிருதம். உலகத்திலேயே அந்த சமஸ்கிருதம் பேசுபவர்கள் 5000 பேர் கூட இருக்க மாட்டார்கள். கோவிலில் மந்திரம் சொல்லத் தெரிந்தவர்களுக்குக் கூட, சமஸ்கிருதம் பேச தெரியாது. இப்படி இல்லாத ஒரு மொழியை நீங்க கத்துக்கிட்டா தான் இந்திய கலாச்சாரத்தை புரிந்து கொள்ள முடியும், இந்தியா என்பது இந்த மொழியில்தான் அடங்கி இருக்கிறது என்று அதை வந்து பள்ளிக்கூடங்களில் திணிக்கிறார்கள்.

இவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு ஜெர்மன் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இவர்கள் வந்ததும் அதெல்லாம் வேண்டாம், இந்தி, சம்ஸ்கிருதமும் போதும் என்று சொல்லி திணித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**எங்களுக்கு இந்தி வேண்டாம்!**

தமிழ்நாட்டில் கேந்திரிய வித்யாலயாவில் தமிழ் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்றால் அந்த பள்ளிகளில் இருக்கக்கூடிய 10, 20 பிள்ளைகள் சேர்ந்து போய் அங்க இருக்கக்கூடிய நிர்வாகத்திடம் கோரிக்கை வைக்க வேண்டும். அந்த கோரிக்கையை அவர்கள் நினைத்தால் நிறைவேற்றுவார்கள்.

இப்படிப்பட்டவர்களை நம்பி, நாம் மூன்று மொழி கொள்கையை ஏற்றுக்கொண்டால் இங்கே நீங்கள் எந்த மொழியை கொண்டு வந்து திணிப்பீர்கள் என்பது தெரியாமலா நமது முதலமைச்சர் இதை எதிர்க்கிறார்?

இங்கே ஆங்கிலம் படித்துக் கொண்டிருக்கக்கூடிய எங்களின் பிள்ளைகளின் நிலைமை என்ன ஆகும்?

இங்கே இருக்கக்கூடிய நமது பிள்ளைகள், இன்று உலகம் முழுவதும் எங்கே நினைத்தாலும் போய் வேலை தேடிக்கொண்டு போக முடியும். அதனால், வேலை பார்க்க போகிற இடத்தில், போய் அந்த மொழியை பேச வேண்டும் என்று நினைத்தால் நியாயமாக பிகாரிலும் உபியிலும் தமிழ் சொல்லித் தாருங்கள். அங்கேயிருந்து எத்தனை பேர் இங்கே வந்து வேலை செய்கிறார்கள்? கோவிட் நேரத்தில் புலம்பெயர் தொழிலாளர்கள் பட்ட பாடு நமக்கெல்லாம் தெரியும். அதனால் அவர்களுக்கு தமிழ் கற்றுக் கொடுத்து அனுப்புங்கள். எங்களுக்கு இந்தி வேண்டாம்.

**கனவு பலிக்காது!**

நாங்கள் கடல் கடந்த உலகம் முழுவதும் பரவி கிடக்க தெரிந்தவர்கள்! இந்த உலகத்திற்கான அறிவியலை கற்றுக்கொண்டு அதை பரப்ப பிறந்தவர்கள். இது தந்தை பெரியாரின் மண், பேரறிஞர் அண்ணாவின் மண், தலைவர் கலைஞரின் மண். இங்கே எல்லாருக்கும் எல்லாமும் கிடைக்க வேண்டும் என்பதுதான் நமது அடிப்படை சித்தாந்தம். இதை உடைத்து எப்படியாவது இந்த மண்ணிலே கால் ஊன்றி விடலாம் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள், அது எந்த காலத்திலும் நடக்காது.

**எம்.பி.க்கள் எண்ணிக்கையை குறைக்க நடவடிக்கை!**

இது ஒரு புறம் என்றால் எந்தெந்த மாநிலங்கள் மக்கள் தொகையை கட்டுப்படுத்தி இருக்கிறதோ, அவர்களுக்கெல்லாம் எம்.பி.க்கள் எண்ணிக்கை குறைக்கப்படும் என்ற நிலைமை இப்போது உருவாகியிருக்கிறது.

எங்கெல்லாம் மருத்துவ வசதிகள் சரியாக இல்லையோ, எங்கெல்லாம் கல்வி போய் சேரவில்லையோ அந்த மாநிலங்களில் எல்லாம் மக்கள் தொகை கட்டுப்படுத்தப்படவில்லை. ஓட்டப்பந்தயத்தில் கடைசியாக வந்தவனுக்கு ஆறுதல் பரிசு வேண்டுமானால் கொடுக்கலாம், ஆனால் அவனுக்கு முதல் பரிசைக் கொடுத்துவிட்டு ஜெயித்தவனுக்கு தண்டனை கொடுப்பது போலத்தான் உள்ளது. இது எந்த விதத்தில் நியாயம் என்ற கேள்வியைத்தான் நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் கேட்கிறார்.

**கையெழுத்து இயக்கம் நடத்தி வாங்கிக் கட்டிக் கொண்ட அம்மையார்!**

அதைக் கேட்டவுடன் பிஜேபி பதறுகிறது. அதனால்தான் யாரோ ஒரு அம்மையார் வந்து கையெழுத்து இயக்கம் நடத்துறேன் என்று சொல்லி வாங்கி கட்டிக்கொண்டு போயிருக்கிறார்.

டி லிமிடேஷன் பத்தி இப்போதே ஏன் பேசுகிறீர்கள் என கேட்கிறார்கள். நீங்கள் கணக்கெல்லாம் எடுத்து முடித்துவிட்டு என்ன பண்ணுவீர்கள் என்பது எங்களுக்கு தெரியும்.

திரிணமூல் காங்கிரஸ் முதலமைச்சர் இன்று பேசியிருக்கிறார், அந்த இயக்கம் பேசிக் கொண்டிருக்கிறது. மேற்கு வங்காளத்தில் இருக்கக்கூடிய வாக்காளர் அடையாள அட்டையில் இருக்கக்கூடிய அதே எண்கள் குஜராத்தில், ஹரியானாவில் இருக்கின்றன. தேர்தல் கமிஷன் இதற்கு பதில் சொல்லவில்லை.

இதே மாதிரி எத்தனை பிரச்சினைகள் மகாராஷ்டிராவில், ஹரியானாவில், ஏன் நடந்து முடிந்த டெல்லி தேர்தலில் கூட நீங்கள் என்னென்ன செய்தீர்கள் என்பது அத்தனை பேருக்கும் தெரியும்.

அதனால எங்களுடைய முதலமைச்சர் பிரச்சினை நடக்கும் வரை காத்திருந்து அதற்கு பின்னால் பேச தயாராக இல்லை. அது நடப்பதற்கு முன்பே, வருவதற்கு முன்னால் பேசத் தெரிந்த தலைவர் எங்கள் தலைவர் அண்ணன் முதலமைச்சர்.

நீங்கள் மக்கள் தொகை கணக்கெடுப்பதற்கு முன்பே... தொகுதி மறு வரையறை எப்படி செய்யப் போகிறீர்கள் என்பதை சொல்லிவிட்டு மக்கள் தொகை கணக்கெடுப்பை தொடங்குங்கள் என்று முதலமைச்சர் சொல்கிறார்.

அதனால்தான், தமிழ்நாட்டைப் பற்றி அக்கறை இருக்கக்கூடிய அனைத்துக் கட்சிகளையும் ஒருமித்த குரலிலே வந்து பேசுங்கள் என அழைத்து, முன்னெடுப்பை எடுத்து அத்தனை பேரையும் ஒன்றிணைத்திருக்கக் கூடிய முதலமைச்சர் நமது முதலமைச்சர் நம் தளபதி.

அவருக்கு நமது பிறந்தநாள் வாழ்த்துக்களை மறுபடியும் தெரிவித்து அவர் பின்னால் அணி திரள்வோம். தமிழகத்தின் உரிமைகளை நமது பிள்ளைகளின் எதிர்காலத்தை பாதுகாப்போம்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் அரவிந்த் ரமேஷ், காரம்பாக்கம் கணபதி, பிரபாகர் ராஜா, தி.மு.க. மாநில மகளிரணி சமூக வலைதள பொறுப்பாளர் ரத்னா லோகேஷ்வரன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்!

---

### ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருவது!




**இந்தி பேசும் 90% இடங்களில் ஒரு மொழி மட்டுமே!**

**பீகார், உத்தரபிரதேசம், மத்திய பிரதேசம் உள்ளிட்ட இந்தி பேசும் மாநிலங்களில் 90% இடங்களில் ஒரு மொழி மட்டுமே கற்றுக்கொடுக்கப்படுகிறது என இந்து ஆங்கில இதழ் வெளியிட்டுள்ள ஆய்வில் தகவல்.**